# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1635 - 2010 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2010.01.01**

*1635 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 7 |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2010, சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் பாலார் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2010, தை மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, கார்த்திகை 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | மன்னார் நகரப் பிரிவில் முஸ்லிம், விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மன்னார் |

1-04

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் பாலார் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2010, மாசி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, மார்கழி 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கெக்கிராவ | கெக்கிராவ பிரதேசத்தின் கலகம் பலாத்த பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |

1-164

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி (தமிழ்மொழி மூலம்)- நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2010, மாசி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, மார்கழி 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | நுவரெலியா நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | நுவரெலியா | தலவாக்கலை-லிந்துல பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | நுவரெலியா | தலவாக்கலை-அக்கரபத்தனை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | அம்பகமுவ | ஹற்றன் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் அம்பகமுவ கோறளை பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | கொத்மலை | றம்பொட பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | கொத்மலை | பல்லேபளே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | கொத்மலை | மதபன பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**பதிவாளர் சேவையில் தரம் III பதவிகட்கு ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான போட்டிப் பரீட்சை - 2009**

COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POSTS OF REGISTRARS GRADE III OF THE REGISTRAR SERVICE - 2009

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் தரம் III பதிவாளர் பதவிகளுக்காக ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சையின் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- 2010, ஏப்பிறல் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு திணைக்களத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக பதிவாளர் சேவையின் தரம் III பதிவாளர் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் :-

(i) இப்பதவி நிரந்தரமானதாகும் ; ஓய்வூதிய உரித்துடையதாகும். நியமிக்கப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும். தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இது தொடர்பில் தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 இல் இருந்து 12 வரையான பிரிவுகளும் பொருத்தமானவையாகும்.

(iii) சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர் ஒருவர் உரிய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பயிற்சியைப் பெறவேண்டும்.

(iv) அரச சேவைக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுவோர் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(v) அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் ஒரு வருடம் வரை பதில் சேவை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

(vi) நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்கள் முடிவதற்குள் பதிவாளர் நாயகத்தால் நடாத்தப்படும் வினைத்திறமைகாண் தடை எழுத்துப் பரீட்சையில் சித்திபெற வேண்டும். வயது அடிப்படையிலான வினைத்திறமைகாண் தடையில் விடுப்பு வழங்கப்படமாட்டாது.

(vii) அரச சேவையில் உள்ள அலுவலர்கள் இந்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதும் முந்திய சேவையின் அங்கத்துவம் முடிவுறுவதோடு அச்சேவைக்கு மீளவும் திரும்புவதற்கு உரிமையற்றவர் ஆவார்.

4. **சம்பளத்திட்டம்**.- MN-4-2006-ரூபா 15,215-10x215-4x240-7x320-15x360-ரூபா 25,965.
(பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (iv))

5. **வயதெல்லை**.- தகுதியை நிறைவுசெய்த தினத்தில் 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரச சேவையில் உள்ளோருக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

6. **கல்வித் தகைமைகள்**.- 2010.01.28 ஆந் திகதிக்கு கீழ்க்காணப்படும் தகுதிகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

6.1 வெளி விண்ணப்பதாரர்கள் :
ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகள் ;

6.2 உள்ளக விண்ணப்பதாரர்கள் :
(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தினத்திற்கு முற்பட்ட 5 வருட காலத்தில் சேவைக்காலத்துடனான பொது முகாமைத்துவ சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்கள் ;

அல்லது

(ஆ) 8 வருட சேவைக்காலத்துடன் மேற்குறிப்பிட்டது போன்று 5 வருட திருப்திகரமான காலத்துடனான பொது முகாமைத்துவ சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்கள்

**குறிப்பு**.- இப்பந்தியில் ''திருப்திகரமான சேவைக்காலம்'' என்பதனால் கருதப்படுவது விண்ணப்பம் கோரப்படும் தினத்திற்கு முற்பட்ட 5 வருட காலத்துள் எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெற்றுக்கொண்டவர்களாகவும், எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் ஆட்படாத சேவைக்காலமாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை** :

(i) வெளி விண்ணப்பதாரர்கள்
(ii) உள்ளக விண்ணப்பதாரர்கள்

} அரச வர்த்தமானி/ பத்திரிகை விளம்பர அறிவித்தல் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டு தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் முடிவுகளின் படி தெரிவுசெய்யப்படுவர். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெற்ற விண்ணப்பதாரிகளுள் கூடிய புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூ. 400 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு 20-03-20-13 இன்கீழ் மாவட்டச் செயலகத்தில்

அல்லது பிரதேச செயலகத்தில் வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீள செலுத்தப்படல் மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை தம்மோடு வைத்துக்கொள்வது உகந்தது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/சேவையில் பணிபுரியும் விண்ணப்ப தாரிகளின் மேற்படி விண்ணப்பம் அவர்களது திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவரினூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடனான மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரியாக அமைதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சையாளர் தன் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பதாரிகள் சிங்கள மொழியுடன் ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியுடன் ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்திற்குப் பயன்படுத்தப்படும் தாள் 8 1/2'' x 12'' அளவானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தாளின் இரு பக்கங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 7 வரையான விடயங்கள் முதற்பக்கத்திலும் ஏனையவை மறுபக்கத்திலுமாக அமைதல் வேண்டும். விண்ணப்பத்தின் நிழற்பிரதியொன்றை தம்மோடு வைத்துக்கொள்வது உகந்தது.

(ஆ) விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரர்கள் தாம் பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்றுள்ள மொழியிலேயே நிரப்புதல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் 2010.01.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் இடப்பட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பதிவாளர் சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க/மாகாண சேவையினரின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து வகைகளிலும் பூரணத்துவமற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் செய்யப்படும் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும். அதுபற்றி பத்திரிகைமூலம் அறிவிக்கப்படும். அவ்வறிவித்தல் செய்யப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து, உடனடியாக பரீட்சை ஆணையாளர் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தாங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதி, பதிவுத்தபால் பற்றுச்சீட்டுப் பிரதி என்பவற்றுடன் பதில் அனுப்பவேண்டிய பக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்புக.

10. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி**.- (i) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தின் நிர்வாகியிடம் தனது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ii) அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பொதுச் சட்டதிட்டங்களை பின்பற்றுதல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டையை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையாக கணிக்கப்பட மாட்டாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிர்வாகி திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு கீழ்க்குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை ;

(ii) வழங்கப்பட்ட திகதியானது பரீட்சை நடைபெறும் தினத்திற்கு 3 வருடம் மேற்படாதவாறாக செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்**.- (அ) பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவரென்பது கண்டுபிடிக்கப் படின், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்தி லாயினும் அவரது பரீட்சார்த்தித் தன்மையை நிராகரிப்பதற்கு இடமுண்டு. அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள பரீட்சார்த்தி யொருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு விடயம் அவர் அதனை பொய் எனத் தெரிந்தும் சமர்ப்பித்துள்ளாரென்பது கண்டுபிடிக்கப் படின் அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயத்தை வேண்டுமென்றே அவர் மறைத்து இருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

13. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சை முறை** :

(i) மொழிமூலம் :

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஏதேனுமொரு மொழியில் விண்ணப்பித்தல் முடியும்.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்திலேயே சகல வினாப்பத்திரங்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.

(இ) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த் திக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) பாடங்களும் அது தொடர்பான விபரங்களும் :

(அ) கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான எழுத்து மூலம் சித்தியடையும் பரீட்சைகள் :

| | பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | மொழியும் ஆற்றலும் (சிங்களம்/தமிழ்) | 1 மணித்தியாலம் | 100 |
| (ii) | நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 |
| (iii) | பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 |
| (iv) | ஆங்கில மொழி | 1 மணித்தியாலம் | 100 |

(1) தகுதியையும் திறமையையும் பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மொழியும் ஆற்றலும் வினாப்பத்திரத்தில் கடிதம் தயாரித்தல், அட்டவணை தயாரித்தல், கையெழுத்து ஆகிய விடயங்கள் அடங்கும்.

(2) நுண்ணறிவு வினாப்பத்திரம், நுண்ணறிவைப் பரிசோதிக்கும் பரீட்சையாவதுடன் பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக ஆராயும் திறனையும் நேர்முகமின்றி சமர்ப்பிக்கப்படும் தகவல் தொடர்பில் ஆராய்ந்து செயற்படும் திறனையும் அளவிடும் நோக்கில் தயாரிக்கப்பட்டதாக அமையும்.

(3) பொது அறிவு வினாப்பத்திரம் பொது அறிவை அளவிடும் பரீட்சையாவதுடன் இலங்கையின் சமூக கலாசார விடயங்களுடன் சர்வதேசத்திலும் முக்கியமான விடயங்களுடனான கல்வி தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதாக அமையும்.

(4) ஆங்கில வினாப்பத்திரம் பந்தியொன்றை விளங்கிக்கொள்ளும் ஆற்றல், சுருக்கமான கடிதம் தயாரித்தல், சிங்கள/தமிழிலான இலகுவான பந்தியொன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் தொடர்பாக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குச் சமமான ஆங்கில அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து இறங்குவரிசை மூலம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் நோக்கம் கல்வி மற்றும் ஏனைய தகைமை சான்றிதழ்களை நுனித்து ஆராய்வதன் பொருட்டே ஆகும். இதற்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. உண்மையான சான்றிதழ்களென நிரூபிக்கப்பட்ட மற்றும் அதிக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்தே இப்பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009.12.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

பதிவாளர் நாயகம் திணைக்களம்

பதிவாளர் சேவையில் தரம் III பதவிகட்கு ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான போட்டிப் பரீட்சை - 2009

COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POSTS OF REGISTRARS
GRADE III OF THE REGISTRAR SERVICE - 2009

(அலுவலக உபயோகத்திற்காக மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் -2
தமிழ் -3
ஆங்கிலம் -4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

-----------------------------------------------------------

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.
உதாரணம் : MR./MRS/MISS SILVA, A. B.

(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.

2. முழு முகவரி :-

(i) தனிப்பட்ட (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.

(ii) அலுவலக (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.
(அரசாங்க சேவையில்/மாகாண சேவையில் கடமையாற்றும் அலுவலர் தனது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

(ii) 2010.01.28 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
(அரசாங்க சேவையாளர் அல்லாத பரீட்சார்த்திகள் பிறப்பு சான்றிதழின் உண்மைப் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.)

4. பால் : பெண் -1
ஆண் -2

(கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்)

5. விவாகமானவரா அல்லது தனிநபரா :
விவாகமானவர் -1
விவாகமாகாதவர் -2

(கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்)

6. தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

7. பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தாங்கள் தகுதிபெற்றுள்ளது பரீட்சை அறிவித்தலின் எப்பிரிவின்கீழ் : 6:1/ 6:2 (தேவையற்றவற்றை நீக்கிவிடுக.)

7.1. 6:1 ஆம் பிரிவின் கீழாயின்-
பெற்ற பட்டம் :----.
பெறப்பட்ட வருடம் :----.
(பட்டதாரிச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்குக.)

7.2. 6:2 ஆம் பிரிவின் கீழாயின்-
பொது முகாமைத்துவ (பொது எழுதுனர் சேவை) சேவைக்கான முதல்-
நியமனத் திகதி :----.
தற்போது வகிக்கும் தரம் :----.
அத்தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

8. பற்றுச்சீட்டினை மீண்டும் கழற்றி எடுக்க முடியாதவாறு பற்றுச்சீட்டின் ஒரு பகுதியை ஒழுங்காக ஒட்டவும் :

9. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இல. .................................... உம் ....................................................... ஆந் திகதியும் கொண்ட பணப்பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதெனவும் உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி செயலாற்றுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவரென்பது அறிய நேரிடின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது விண்ணப்பத்தை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் உள்ளாவதுடன் நியமனம் கிடைத்தபின் அறிய நேரிடின் நட்டஈடுகள் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதி செய்தல்**

எனது அலுவலகத்தில் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி ..................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் 200....... ஆம் ஆண்டு ............................ மாதம் ..................... ............. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

விண்ணப்பதாரர் அரசாங்க அலுவலரொருவராயின், திணைக்களத் தலைவர் அல்லது உரிய பதவிநிலை அலுவலரினாலும், வெளிவிண்ணப்பதாரியாயின் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய ஓய்வுபெற்ற அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, அரச அல்லது மாகாண சேவையில் வருடாந்த சம்பளம் ரூ. 2,30,060 ஐ அல்லது அதற்கு மேல் பெறுவோர், பிரசித்த நொத்தாரிசு அல்லது மதகுரு அல்லது வழிபாட்டுத்தலத்திற்கு பொறுப்பான மதகுரு ஒருவரினாலும் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ........................................................... இத்திணைக்களத்தில் கடமையாற்றுகிறார் எனவும் அவரின் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் இந்த எழுத்துப் பரீட்சை தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனவும் எச்சரிக்கை தவிர்ந்த எந்தமுறையிலான தண்டனையையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும் அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயரும் பதவியும் :----.
முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
திகதி :----.

1-165

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2010**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 01.01.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.12.2009 |
| | | வெள்ளி | 08.01.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.12.2009 |
| | | வெள்ளி | 15.01.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.01.2010 |
| | | வெள்ளி | 22.01.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.01.2010 |
| | | வியாழன் | 28.01.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.01.2010 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 05.02.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.01.2010 |
| | | வெள்ளி | 12.02.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.01.2010 |
| | | வெள்ளி | 19.02.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.02.2010 |
| | | வெள்ளி | 26.02.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.02.2010 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 05.03.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.02.2010 |
| | | வெள்ளி | 12.03.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.02.2010 |
| | | வெள்ளி | 19.03.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.03.2010 |
| | | வெள்ளி | 26.03.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.03.2010 |

*லக்ஷ்மன் குணவர்தன,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.